19293

AL/2020/23/T-I(NEW)

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

දේශපාලන විද්‍යාව I
அரசியல் விஞ்ஞானம் I
Political Science I

23 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

சுட்டெண்: ........................................

**அறிவுறுத்தல்கள்:**

* இவ்வினாத்தாள் **A, B** ஆகிய **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.
* பகுதி **A** பல்தேர்வு வினாக்கள் **30** இனையும் பகுதி **B** குறு வினாக்கள் **20** இனையும் கொண்டுள்ளது.
* சகல வினாக்களுக்குமான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுத வேண்டும்.
* ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் மொத்தம் **100** புள்ளிகள் வழங்கப்படும்.

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்.**

| பக்க இல. | வினா இல. | புள்ளிகள் |
|---|---|---|
| 1. | 1 - 2 | |
| 2. | 3 - 10 | |
| 3. | 11 - 18 | |
| 4. | 19 - 24 | |
| 5. | 25 - 30 | |
| 6. | 31 - 38 | |
| 7. | 39 - 46 | |
| 8. | 47 - 50 | |
| மொத்தம் | | |

| | கையொப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

## பகுதி A

* **1** தொடக்கம் **20** வரையிலான வினாக்களுக்கு **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் **தெரிவுசெய்க.**

**1.** அரசியல் என்பது குறித்து நிற்பது,
(1) அரச அதிகாரத்துடன் தொடர்புடைய ஒரு செயன்முறையை ஆகும்.
(2) அரசாங்கத்துக்குள் இடம்பெறும் செயற்பாடுகளை ஆகும்.
(3) அரசியல்வாதிகள் தமது அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்குப் பயன்படுத்தும் ஒரு பொறிமுறையை ஆகும்.
(4) சர்வதேச முறைமைக்குள் அரசுகளின் நடத்தைகளை விவரிக்கும் ஓர் எண்ணக்கருவை ஆகும்.
(5) அரசு, அதன் நிறுவனங்கள், சமூகம் ஆகியவற்றுடன் பரஸ்பரம் தொடர்புகொள்ளும் ஒரு துறையை ஆகும். (......)

**2.** அரசியலைக் கற்பதென்பது,
(1) தத்துவார்த்த, ஒப்பீட்டு அணுகுமுறைகளுடன் வரையறுக்கப்பட்டது.
(2) அனுபவரீதியான கற்கைகளை நிராகரிக்கின்றது.
(3) பண்புசார் தரவுகளுக்குக் குறைந்த முக்கியத்துவத்தினை வழங்குகின்றது.
(4) நடைமுறை அரசியலில் ஈடுபடுவதிலிருந்து வேறுபட்டது.
(5) நெறிமுறைத் தத்துவங்களை நிராகரிக்கின்றது. (......)

[பக் 2 ஐப் பார்க்க.

**3.** ஓர் அரசியல் கருத்தியல்,
(1) பரஸ்பரம் முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளது.
(2) சமூகத்தின் அரசியல் அக்கறையைச் சீராக்குகின்றது.
(3) பிரஜைகளின் அரசியல் நடத்தையின் மீது செல்வாக்குச் செலுத்துவதில் இருந்து விடுபடுகின்றது.
(4) எப்போதும் சமயக் குழுக்களிடம் இருந்து விசுவாசத்தினை எதிர்பார்க்கும்.
(5) எப்போதும் நடைமுறையில் இருக்கும் ஒழுங்குக்கு எதிராகச் செல்லும். (……)

**4.** அரசு என்பது,
(1) சமூகத்தின் ஒரு படைப்பல்ல.
(2) அரசாங்கத்தின் பிரதானமானதொரு கூறாகும்.
(3) அரசியல் சமூகமொன்றின் இறைமை அதிகாரத்தினைக் கொண்டுள்ளது.
(4) அரசாங்கம் என்பதற்குச் சமமானதொரு சொல்லாகும்.
(5) உள்வாரி இறைமையினை மாத்திரம் கொண்டுள்ளது. (……)

**5.** இறைமையானது,
(1) சமூகத்தின் சகல அமைப்புகளுக்கும் கிடைக்கப்பெறும் ஓர் அதிகாரமாகும்.
(2) வரையறுக்கப்பட்ட ஆள்புல எல்லைக்குள் அரசொன்றின் மீயுயர் அதிகாரத்தைக் குறித்து நிற்கின்றது.
(3) அரசொன்று ஏனைய அரசுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதனை அனுமதிக்கின்றது.
(4) எப்போதும் பிரிக்க முடியாதது.
(5) சமஷ்டி அரசுகளில் மத்தியமயப்படுத்தப்பட்டு காணப்படும். (……)

**6.** தனிமனித சுதந்திரம் தொடர்பான தாராளவாத கோட்பாடு வலியுறுத்துவது,
(1) சமூகம், சமூக வகுப்புகளால் கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதனையாகும்.
(2) சமூகத்தின் அனைத்து தனிநபர்களுக்கும் சுதந்திரம் உரித்துடையதன்று என்பதனையாகும்.
(3) வர்க்கப் போராட்டத்தின் மூலம் தனிமனித சுதந்திரத்தை அடைந்து கொள்ள முடியும் என்பதனையாகும்.
(4) தனிநபர்கள் சுதந்திரத்தினை அனுபவிப்பதற்கு அவசியமான சூழ்நிலையினை அரசாங்கம் உருவாக்கக்கூடாது என்பதனையாகும்.
(5) தனிநபர் சுதந்திரத்தினைப் பாதுகாப்பதற்கு சட்டத்தின் ஆட்சி அத்தியாவசியம் என்பதனையாகும். (……)

**7.** ஓர் அரசியல் கருத்தியல் என்ற வகையில் பாசிசமானது,
(1) 20 ஆம் நூற்றாண்டின் 3ஆம், 4ஆம் தசாப்தங்களில் வளர்ச்சியடைந்தது.
(2) பிரான்சில் நெப்போலியன் பொனபாட்டின் காலத்தில் வளர்ச்சியடைந்தது.
(3) மதச் சுதந்திரத்தினை வலியுறுத்தியது.
(4) தாராண்மைவாதத்தின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தது.
(5) உலக சமாதானத்திற்காக முன்நின்றது. (……)

**8.** மோதல் (முரண்பாடு) தொடர்பான செயற்பாட்டுரீதியான வகைப்பாட்டுக்கான ஓர் உதாரணம்,
(1) அரச நிர்மாண மோதல்கள் (2) ஆக்கபூர்வமான மோதல்கள்
(3) தனிநபர்களுக்கிடையிலான மோதல்கள் (4) அரசுக்குள் உள்ளக மோதல்கள்
(5) தேசங்களுக்கிடையிலான மோதல்கள் (……)

**9.** தடைகள் மற்றும் சமன்பாடுகள் என்ற தத்துவத்தின் நோக்கத்துடன் தொடர்புடைய சரியான கூற்று
(1) நீதித்துறையின் சுதந்திரத்தினைப் பாதுகாத்தல்
(2) அமைச்சரவையின் அதிகாரத்தைப் பலப்படுத்துதல்
(3) அரசியலில் பிரஜைகளின் பங்கேற்பினை ஊக்குவித்தல்
(4) அரசாங்கத்துக்கான பொதுமக்களின் ஆதரவினை உறுதிப்படுத்துதல்
(5) அரசாங்கத்தின் அதிகார துஸ்பிரயோகத்தினைத் தடுத்தல் (……)

**10.** அரசியலைக் கற்பதற்கான அரசியல் பொருளாதார அணுகுமுறை
(1) பெண்ணியவாத அணுகுமுறைக்கு மாற்றீடாகத் தோற்றம் பெற்றது.
(2) சமூகத்தில் காணப்படும் அதிகாரக் கட்டமைப்புகளை நியாயப்படுத்துகின்றது.
(3) அரசியலின் பொருளாதார, சமூக, வர்க்க அடிப்படைகளின் முக்கியத்துவத்தின் மீது கவனம் செலுத்துகின்றது.
(4) சமூக அரசியல் அதிகாரம் தொடர்பாக தீவிர விமர்சனமொன்றினை வழங்கத் தவறியுள்ளது.
(5) தாராள அரசியல் தத்துவத்துடன் ஒப்பிடப்படுகிறது. (……)

[பக் 3 ஐப் பார்க்க.

**11.** பாராளுமன்ற அரசாங்க முறையொன்றில்,
(1) பிரதமரும் அமைச்சரவையும் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக்கூற வேண்டியதில்லை.
(2) அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்புத் தத்துவம் என்பது அவசியமானதொரு பண்பு அல்ல.
(3) அமைச்சரவையின் தலைவராக அரசின் தலைவர் காணப்படுவார்.
(4) பிரதமர், அமைச்சரவை அமைச்சர்களை பாராளுமன்றத்துக்கு வெளியில் இருந்து தெரிவு செய்ய முடியும்.
(5) அரசாங்கம் பாராளுமன்றத்தின் பெரும்பான்மை ஆதரவிலேயே தங்கியிருக்கும். (……)

**12.** சமஷ்டி முறையொன்றில்,
(1) மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கங்களைவிட பலவீனமானது.
(2) பன்மைத்துவம், தேசிய ஒருமைப்பாடு என்பன ஊக்குவிக்கப்படுவதில்லை.
(3) சமஷ்டி அரச கட்டமைப்பில் இருந்து மாநில அரசுகள் ஒருதலைப்பட்சமாக விலக முடியும்.
(4) இரு மட்ட அரசாங்கங்கள் காணப்படும்.
(5) சட்டத்துறை ஓரங்க மன்றமாகக் காணப்படும். (……)

**13.** சர்வதேச அரசியல் கற்கையானது,
(1) பொருளாதார இராஜதந்திர உறவுகளுடன் வரையறுக்கப்பட்டதாகும்.
(2) அரசுக்கும் அதன் பிரஜைகளுக்கும் இடையிலான உறவுகளில் கவனம் செலுத்துகின்றது.
(3) தேசிய அரசுகளுக்கிடையிலான பரஸ்பர உறவுகளில் கவனம் செலுத்துகின்றது.
(4) இறைமையுள்ள தேசங்களுக்கிடையில் இடம்பெறும் அரசியலை மறுதலிக்கின்றது.
(5) அரசுகளுக்குள்ளே நிறுவனரீதியான கட்டமைப்பு எவ்வாறு செயற்படுகின்றது என்பதில் கவனம் செலுத்துகின்றது. (……)

**14.** சர்வதேச அரசியலில் அரசு சார்ந்த செயற்பாட்டாளர்களில் உள்ளடங்குவது /உள்ளடங்குவோர்
(1) தேசிய அரசுகள்
(2) சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள்
(3) பல்தேசியக் கம்பனிகள்
(4) கீர்த்திமிகு நபர்கள்
(5) சர்வதேச நிதி நிறுவனங்கள் (……)

**15.** கொள்கை உருவாக்கச் செயன்முறையில் சிவில் சமூக அமைப்புக்கள்,
(1) அரசாங்க நிறுவனங்களுடன் போட்டியிடுகின்றன.
(2) கொள்கைப் பகுப்பாய்வுடன் மட்டுப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிநிரலைக் கொண்டுள்ளன.
(3) கொள்கை மறுசீரமைப்புக்காகப் பிரசாரம் செய்ய முன்வருவதில்லை.
(4) சமூகரீதியாக ஒதுக்கப்பட்டுள்ள குழுக்களினதும் நலன்களை ஊக்குவிக்கின்றன.
(5) எப்போதும் அரசியல் செல்வாக்கில் இருந்து விடுபட்டிருக்கும். (……)

**16.** ஓர் அரசியல் கருத்தியல் என்ற வகையில் குடியரசுவாதம்,
(1) முடியாட்சிக்கு எதிராக வளர்ச்சிபெற்றது.
(2) சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் பிரஜைகள் ஆர்வம் காட்டக்கூடாது என்ற கருத்தைக் கொண்டுள்ளது.
(3) பிரஜைகளின் அரசியல் செயலற்ற நிலையின் மீது கவனம் செலுத்துகின்றது.
(4) மக்கள் இறைமை என்ற எண்ணக்கரு தொடர்பாக சந்தேகம் கொள்கிறது.
(5) அரசின் தலைவர் மக்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டியதில்லை என்ற தத்துவத்தினை அறிமுகம் செய்தது. (……)

**17.** பின்வருவனவற்றுள் இராணுவ நிகழ்ச்சிநிரலைக் கொண்டுள்ள சர்வதேச அமைப்பு
(1) ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை (2) சார்க் அமைப்பு
(3) ஆசியான் அமைப்பு (4) நேட்டோ அமைப்பு
(5) பொதுநலவாய அமைப்பு (……)

**18.** பிரதிநிதித்துவ ஜனநாயகம்
(1) பாராளுமன்ற அரசாங்க முறையூடாக வளர்ச்சி பெற்றது.
(2) நேரடி ஜனநாயக முறைக்கு ஒப்பான பண்புகளைக் கொண்டுள்ளது.
(3) எதேச்சாதிகார அரசாங்க முறையொன்றின் ஒரு பண்பாகும்.
(4) ஒரு நபருக்கு ஒரு வாக்கு என்ற கருத்துக்கு எதிரானது.
(5) மக்கள் தீர்ப்புக்கான ஒரு மாற்றீடாகும். (……)

[பக் 4 ஐப் பார்க்க.

**19.** இலங்கையின் அண்மைக்கால வெளிநாட்டுக் கொள்கையானது,
(1) சோசலிச வழிகாட்டலைக் கொண்டுள்ளது.
(2) பொருளாதார இராஜதந்திர உறவுகளில் கவனம் செலுத்துகின்றது.
(3) சர்வதேச பொருளாதார அதிகார சமநிலையின் மாற்றங்களுக்கு பதிலளிக்காதுள்ளது.
(4) அராபிய அரசுகளைப் புறக்கணிக்கின்றது.
(5) உலகளாவிய போக்குகளிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. (……)

**20.** அமுக்கக்குழுக்கள்
(1) ஆரோக்கியமான ஜனநாயகத்தின் ஒரு குறிகாட்டியாகும்.
(2) தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக தொழிலாளர் வர்க்கத்தினை அணிதிரட்டுகின்றன.
(3) சோசலிச நாடுகளில் செல்வாக்குமிக்க வகிபங்கினை ஆற்றியுள்ளன.
(4) தேர்தலில் போட்டியிடுவதற்காக அரசியல் கட்சிகளுடன் கூட்டணி அமைத்துள்ளன.
(5) அரசாங்கத்தின் கொள்கை உருவாக்கச் செயன்முறையின் மீது செல்வாக்குச் செலுத்துவதில் இருந்து விடுபடுகின்றன. (……)

- **21** தொடக்கம் **25** வரையிலான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள கூற்றுகளில் இருந்து **சரியான கூற்றுத் தொகுதியினைக்** கொண்ட விடையைத் தெரிவுசெய்க.

**21.** இலங்கையின் 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியலமைப்பு
A - மந்திரிசபை அரசாங்க முறையொன்றினை உருவாக்கியது.
B - பொதுச் சேவையினை அமைச்சரவையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது.
C - இருமன்ற சட்ட சபையினைத் தாபித்தது.
D - ஜனாதிபதியை நியமிக்கும் அதிகாரத்தைப் பிரதமருக்கு வழங்கியது.
E - ஜனப்பிரதிநிதிகள் சபையினை தேசிய அரசுப்பேரவை எனப் பெயரிட்டது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (……)

**22.** தற்போது நடைமுறையில் இருக்கும் பிரித்தானிய அரசாங்க மாதிரி
A - மரபுகள் மற்றும் சம்பிரதாயங்களை அரசியலமைப்பின் பகுதிகளாகக் கருதுகின்றது.
B - பாராளுமன்ற இறைமை, கூட்டுப்பொறுப்பு ஆகிய தத்துவங்களினால் வழிநடத்தப்படுகின்றது.
C - தேசிய சட்டத்துறையிடம் அதிகாரத்தினை மத்தியமயப்படுத்துவதற்கு வழிசெய்துள்ளது.
D - பல கட்சி முறையினை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளது.
E - சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வு முறையொன்றினை உருவாக்கியுள்ளது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (……)

**23.** நவ தாராள அரச மாதிரி வலியுறுத்துவது,
A - அரசு சமூக நல விடயங்களில் அர்ப்பணிப்பினைக் காட்ட வேண்டும் என்பதனையாகும்.
B - குறைந்தபட்ச அரசு என்ற எண்ணக்கருவினையாகும்.
C - பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியில் சந்தை சக்திகளின் கேந்திர முக்கியத்துவத்தினையாகும்.
D - அரசின் தலையிடாக் கொள்கைகளை மீளவும் அறிமுகம் செய்வதன் அவசியத்தினையாகும்.
E - தேசிய பொருளாதாரத்தினை உலக பொருளாதாரத்துடன் ஒருங்கிணைப்பதனையாகும்.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (……)

**24.** பிரான்சின் தற்போதைய அரசியலமைப்பு மாதிரியின் கீழ்
A - அரசாங்க முறை ஒற்றையாட்சியாகவும் மத்தியமயப்படுத்தப்பட்டும் காணப்படுகின்றது.
B - வெஸ்ட்மின்ஸ்டர் மாதிரியுடன் ஒப்பிடும்போது பிரதமரின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.
C - ஜனாதிபதி தேர்தல் கல்லூரி ஒன்றினால் தெரிவு செய்யப்படுகின்றார்.
D - நிர்வாக அதிகாரப் பன்முகப்படுத்தல் உள்ளூராட்சி அரசாங்கத்தின் ஒரு முக்கிய பண்பாகக் காணப்படுகின்றது.
E - அமைச்சர்கள் சட்டசபையின் உறுப்பினர்கள் அல்ல.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (……)

[பக் 5 ஐப் பார்க்க.

**25.** அரசியல் கோட்பாட்டிற்கிணங்க குடியுரிமை என்பது

A - தனிநபர்களுக்கு சட்ட அந்தஸ்தினைவிட மேலான ஒன்றை வழங்குகின்றது.
B - தனிநபர்கள் அரசின் செயற்பாடுகளில் பங்கேற்பதற்கான இயலுமையினை வழங்குகின்றது.
C - அரசியல் சமூகமொன்றின் உறுப்பினர்கள் அரசுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதனை எதிர்பார்க்கின்றது.
D - ஒரு நாட்டிற்குள் நுழையும்போது தனிநபர்களுக்குக் கிடைக்கும் சிறப்புரிமையாகும்.
E - தனிநபர்கள் சமூக, அரசியல் உரிமைகளைக் கோருவதற்கான இயலுமையினை வழங்குகின்றது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

- **26** தொடக்கம் **30** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுகளைக் கொண்டுள்ளன. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள (1), (2), (3), (4), (5) ஆகிய விடைகளில் இருந்து தரப்பட்டுள்ள இரு கூற்றுகளுக்கும் மிகச் சரியாகப் பொருந்தும் விடையின் இலக்கத்தினைத் தெரிவுசெய்து அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| இலக்கம் | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மை |
| (2) | உண்மை | பொய் |
| (3) | பொய் | உண்மை |
| (4) | பொய் | பொய் |
| (5) | உண்மை | உண்மையாக இருப்பதுடன் முதலாவது கூற்றை மேலும் விவரிக்கின்றது. |

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று | |
|---|---|---|---|
| **26.** | 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் ஒம்புட்ஸ்மனுக்கு பிரஜைகளின் அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. | பாராளுமன்றம் ஒம்புட்ஸ்மனின் சம்பளத்தை அவரது பதவிக்காலத்தின்போது குறைக்கும் அதிகாரத்தினைக் கொண்டுள்ளது. | (......) |
| **27.** | 1978 ஆம் ஆண்டு மூல அரசியலமைப்பின் கீழ், பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதிபெற அவசியமான வெட்டுப்புள்ளி (வாக்கு வீதம்) 5% ஆகக் காணப்பட்டது. | விகிதாசார பிரதிநிதித்துவ முறை பொதுவாக சிறிய கட்சிகளுக்கும் சிறுபான்மையினக் கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நன்மையளிக்கின்றது. | (......) |
| **28.** | 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கான 17ஆவது சீர்திருத்தம் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான நியமனங்களை மேற்கொள்வதில் ஜனாதிபதிக்கிருந்த தற்றுணிவு அதிகாரங்களைக் குறைத்தது. | 18 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் மூலம் ஜனாதிபதி ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பாராளுமன்ற அமர்வுகளில் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. | (......) |
| **29.** | 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியலமைப்பு பாராளுமன்றத்தில் இரண்டாம் மன்றமொன்றினைத் ஸ்தாபிக்கவில்லை. | முதலாம் குடியரசு அரசியலமைப்பினை உருவாக்கியோர் பாராளுமன்றத்தில் மக்களால் தெரிவு செய்யப்படாத உறுப்பினர்களைக் கொண்டதொரு சபை இருக்கக் கூடாது என்ற நம்பிக்கையினைக் கொண்டிருந்தனர். | (......) |
| **30.** | 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் சபாநாயகருக்கு பாராளுமன்றத்தைக் கூட்டவும் அமர்வுகளை நிறுத்தவும் அதிகாரம் உண்டு. | 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் பாராளுமன்ற அமர்வுகளுக்கான உறுப்பினர்களின் நிறைவெண் 40 ஆகும். | (......) |

[பக் 6 ஐப் பார்க்க.

## பகுதி B

**31.** பின்வரும் பண்புகளை அடிப்படையாகக் கொண்ட **இரண்டு** அரசாங்க மாதிரிகள் எவை?

(1) அரச அதிகாரத்தினை மத்தியமயப்படுத்துதல் : ..........................................................

(2) அரச அதிகாரத்தினைப் பகிர்ந்தளித்தல் : ..........................................................

**32.** இலங்கையில் 1978 ஆம் ஆண்டு ஜனாதிபதி முறையின் உருவாக்கத்திற்கு முன்மாதிரிகளாக கவனத்திற் கொள்ளப்பட்ட **இரண்டு** நாடுகள் எவை?

(1) ..........................................................

(2) ..........................................................

**33.** மோதல் தீர்வு என்பது நீண்டதும் கடினமானதுமான செயன்முறையாகும். இருப்பினும் மோதலைக் கையாள்வதற்கு வேறு ஆக்கபூர்வமான வழிமுறைகள் காணப்படுகின்றன. அவற்றில் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..........................................................

(2) ..........................................................

**34.** (1) அரசியலையும் மதத்தையும் வேறுபடுத்த வேண்டும் என்பதனை வலியுறுத்தும் அரசியல் கருத்தியல் எது?

..........................................................

(2) ஆணாதிக்க அதிகாரத்தினை விமர்சிக்கும் அரசியல் கோட்பாடு எது?

..........................................................

**35.** (1) இலங்கையில் பிற்பட்ட காலத்தில் மத்தியமயப்படுத்தப்பட்ட அரசுக்கான அடித்தளத்தினை இட்ட, காலனித்துவ காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தம் எது?

..........................................................

(2) இலங்கைக்கு வரையறுக்கப்பட்ட வாக்குரிமையினை அறிமுகப்படுத்திய அரசியலமைப்புச் சீர்திருத்தம் எது?

..........................................................

**36.** பின்வரும் இரண்டு அரசியல் சிந்தனையாளர்களிலிருந்து இனங்காணப்படும் **இரண்டு** அரசியல் எண்ணக்கருக்களைக் குறிப்பிடுக.

(1) மொண்டஸ்கியு : ..........................................................

(2) ஜோன் ஒஸ்டின் : ..........................................................

**37.** பின்வரும் ஒவ்வொரு அரசியல் கோட்பாட்டினையும் முன்வைத்த அரசியல் கோட்பாட்டாளரின் பெயரைக் குறிப்பிடுக.

(1) சமூகக் குடியுரிமை : ..........................................................

(2) பின் - காலனித்துவ அரசு : ..........................................................

**38.** 'அரசியலைக் கற்றல்' என்பதில் **இரண்டு** அர்த்தங்கள் காணப்படுகின்றன. அவை இரண்டும் யாவை?

(1) ..........................................................

(2) ..........................................................

[பக் 7 ஐப் பார்க்க.

**39.** அரசியல் கட்சி முறைகள் ஐந்தாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**40.** (1) இலங்கையில் அரசியல் கட்சி முறையினை அடையாளப்படுத்தக்கூடிய ஓர் எண்ணக்கருவினைக் குறிப்பிடுக.

..............................................................................................................

(2) 1956 ஆம் ஆண்டு இலங்கையில் அரசாங்கத்தை அமைத்த அரசியல் கட்சிக் கூட்டணியின் பெயரினைக் குறிப்பிடுக.

..............................................................................................................

**41.** பெண்ணியவாத கருத்தியல் மற்றும் இயக்கத்தின் மரபுகள் / துறைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**42.** வரலாற்றுரீதியாக வளர்ச்சியடைந்துள்ள அரசு மாதிரிகள் / வகைகள் பல காணப்படுகின்றன. அவற்றில் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**43.** தாராண்மைவாதத்தின் மூன்று பிரதான வகைகளில் ஏதேனும் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**44.** உலகமயமாக்கம் தேசிய அரசுகளின் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கம் தொடர்பாக **இரண்டு** கோட்பாட்டு அணுகுமுறைகள் காணப்படுகின்றன. அவற்றைக் குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**45.** அரசு முழு சமூகத்தினதும் நலனுக்காகப் பணியாற்ற வேண்டும் என்ற வாதத்தை முன்வைப்பதற்காக ரூசோ **இரண்டு** எண்ணக்கருக்களைப் பயன்படுத்தினார். அவ்விரு எண்ணக்கருக்களும் யாவை?

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**46.** (1) பொதுக்கொள்கை தொடர்பான கல்விசார் கற்கை நெறி எந்த நாட்டில் தோற்றம் பெற்றது?

..............................................................................................................

(2) 'இலட்சிய பணியகவமைப்பு' என்ற கோட்பாட்டு மாதிரியினை முன்வைத்தவர் யார்?

..............................................................................................................

[பக் 8 ஐப் பார்க்க.

**47.** சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கு அடிப்படையாக அமையும் எண்ணக்கருக்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

**48.** ஒற்றையாட்சி அரசுகளில் மத்தியில் இருந்து உள்ளூர் மட்டங்கள் வரை நிர்வாக அதிகாரங்கள் மூன்று வழிகளில் வழங்கப்படுகின்றன. அவற்றில் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

**49.** 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களில் ஜனாதிபதியின் அதிகாரம் தொடர்பாக **இரண்டு** போக்குகள் காணப்படுகின்றன. அவை யாவை?

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

**50.** கூட்டு சமஷ்டியாக ஆரம்பித்து பின்னர் சமஷ்டி அரசாங்க முறையினைத் தழுவிக் கொண்டுள்ள **இரண்டு** நாடுகளைக் குறிப்பிடுக.

(1)..........................................................................................................

(2) ..........................................................................................................

* * *

19293

AL/2020/23/T-II(NEW)

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා விபாக දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

දේශපාලන විද්‍යාව II
அரசியல் விஞ்ஞானம் II
Political Science II

23 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**

* இவ்வினாத்தாள் **மூன்று** பகுதிகளைக் கொண்டதாகும்.
* பகுதி **I** இலிருந்து குறைந்தபட்சம் **ஒரு** வினாவையும் பகுதி **II** இலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையும் பகுதி **III** இலிருந்து குறைந்தபட்சம் **ஒரு** வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. அரசியலைக் கற்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒப்பீட்டு அணுகுமுறையினை விவரிக்குக. (20 புள்ளிகள்)

2. நவீன ஆள்புல அரசு நான்கு பிரதான அங்கங்களின் / மூலக்கூறுகளின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. அவற்றை விவரிக்குக. (20 புள்ளிகள்)

3. தாராள ஜனநாயக மற்றும் சோசலிச அரச மாதிரிகளுக்கிடையிலான வேறுபாடுகளை ஆராய்க. (20 புள்ளிகள்)

## பகுதி II

4. இலங்கையில் ஜனநாயகத்தின் வளர்ச்சிக்கு டொனமூர் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் வழங்கிய பங்களிப்பினை ஆராய்க. (20 புள்ளிகள்)

5. சோல்பரி அரசியலமைப்பில் காணப்பட்ட வெஸ்ட்மின்ஸ்டர் அரசாங்க மாதிரியின் பண்புகள் எவை என விவரிக்குக. (20 புள்ளிகள்)

6. 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் காணப்பட்ட சட்டசபை, 1947 சோல்பரி அரசியலமைப்பின் கீழ் காணப்பட்ட சட்டசபையில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதனைப் பரிசீலனை செய்க. (20 புள்ளிகள்)

7. இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புடன் தொடர்புடைய பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டினை** விவரிக்குக.

   (i) 13 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் பிரதான பண்புகள்

   (ii) மக்கள் தீர்ப்பு தொடர்பான ஏற்பாடுகள்

   (iii) பிரான்சின் 5 ஆம் குடியரசு அரசியலமைப்பு (1958) மற்றும் இலங்கையின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பின் (1978) கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஜனாதிபதி முறைகளின் ஒத்த பண்புகள்

   (10 × 2 =20 புள்ளிகள்)

/பக்கம் 2 ஐப் பார்க்க

## பகுதி III

**8.** அரசியலமைப்புவாதம் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியன ஜனநாயக ஆட்சிக்கு எந்தளவு பொருத்தப்பாடுடையவை என்பதனை விளக்குக. (20 புள்ளிகள்)

**9.** தற்போதைய பிரித்தானிய அரசாங்க முறை அதன் மரபுரீதியான ஒற்றையாட்சி மாதிரியில் இருந்து விலகிச் சென்றுள்ள விதத்தினை எடுத்துக்காட்டுக. (20 புள்ளிகள்)

**10.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டுக்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) பொதுக் கொள்கை உருவாக்கத்தில் அரசியல் கட்சிகளின் வகிபங்கு

(ii) அரசியல் நிறுவனங்களைப் பற்றிக் கற்பதன் முக்கியத்துவம்

(iii) இலங்கையில் அரசியல் கட்சிகளின் அண்மைக்காலப் போக்குகள்

(iv) சமூக ஜனநாயகத்தின் பிரதான பண்புகள்

(v) தேசிய அரசியலுக்கும் சர்வதேச அரசியலுக்கும் இடையிலான வேறுபாடுகள் (10 × 2 =20 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WIKI

Sri Lanka Biggest past papers Bank